சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் துறை – உழுவை வாடகைத் திட்டம் மற்றும் சிறுபாசனத்திட்டத்தின் கீழ் கனரக இயந்திரங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 59 இயக்கிகளின் தொகுப்பூதியத்தினை மாதம் ரூ.12,000 லிருந்து ரூ.15,000 என உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண்.46 நாள் :14.02.2019

திருவள்ளுவராண்டு 2050

மாசி திங்கள் 2 ஆம் நாள்

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.356, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 30.08.2007.
2) அரசாணை (நிலை) எண்.220, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 25.11.2011.
3) அரசாணை (4டி) எண்.17, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 28.04.2017.
4) அரசு கடித எண்.169/வே.பொ.1/2016–15, நாள் 14.11.2017.
5) அரசாணை (டி) எண்.51, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 26.03.2018.
6) அரசாணை (நிலை) எண்.182, வேளாண்மை (வே.நி.3) துறை, நாள் 16.07.2018.
7) அரசாணை (டி) எண்.161, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 19.07.2018.
8) தலைமைப் பொறியாளர் (வே.பொ.) கடித எண்.T1/11952/2018, நாள் 31.07.2018

•••••••

ஆணை

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத்திட்டம் மற்றும் சிறுபாசனத்திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்ற அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்குவதற்கு, 2007–ஆம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை, மொத்தம் 92 தொகுப்பூதிய பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் தற்பொழுது 59 பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

2)பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, இப்பணியாளர்களுக்கு மாத தொகுப்பூதியம், ஒரே சீராக ரூ.12,000 என உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 7ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2018–2019ம் நிதியாண்டில், மேற்கண்ட 59 தொகுப்பூதிய பணியாளர்களின் பணியிடங்களை தொடர்வதற்கு தொடராணையும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) இதற்கிடையில், மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையில் மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் ஒட்டுநராக ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, பணிபுரிந்து வரும் 95 ஒட்டுநர்களுக்கான மாத

(த.பி.பா)

தொகுப்பூதியத்தினை ரூ.12,000/–லிருந்து, ரூ.15,000/–க்கு உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

4) இதனைத்தொடர்ந்து பார்வை 8ல் படிக்கப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் (வே.பொ) கடிதத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையில் அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கு (Skilled Person) தொழில் நுட்ப திறனும், அனுபவமும் உள்ள இயக்கிகள் தேவைப்படுகின்றனர் என்றும் அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிடுவதற்கான திறனும், அனுபவமும் உள்ள இயக்கிகள், தனியார் துறையில் மாதந்தோறும் ரூ.20,000 முதல் ரூ.25,000/– வரை அல்லது நாளொன்றுக்கு ரூ.1500/–முதல் ரூ.2000/– வரை ஊதியம் பெறத்தக்க வகையில் பணி வாய்ப்புகள் இருப்பதால் மாதம் ரூ.12,000/– தொகுப்பு ஊதியத்திற்கு, ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய பெரும்பாலோர் முன்வருவதில்லை என்றும் மேலும், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பணியாளரும், தொகுப்பூதியம் உயர்த்தப்படாததால் பணிக்கு வருவதில் தயக்கம் காட்டுவதுடன், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவும் முன் வரவில்லை எனவும், வேளாண்மைப் பொறியியல் துறையில் பயன்படுத்தப்படும் அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை பணித்தளங்களுக்கு வெகு தொலைவிற்கு எடுத்துச் சென்று, கருவிகளை பணியில் ஈடுபடுத்தி, பணிகள் முடித்த பிறகு அலுவலக வளாகத்திற்கு எடுத்து வர வேண்டியுள்ளது என்றும் அடுத்ததாக, இயந்திரங்களை, மணல், சேறு ஆகியவற்றை நீக்கி, சுத்தம் செய்த பிறகே, மறு நாள் பணிதளத்திற்கு, கருவியினை விவசாய பணிகளில் ஈடுபடுத்த எடுத்து செல்ல வேண்டியுள்ளது என்றும், மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை, மேற்கொள்ள சுமார் 10–12 மணி நேரங்கள், தினமும் இயக்கிகளுக்கு தேவைப்படுவதாகவும் இதனால், அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்கிட ஒப்பந்த அடிப்படையில், ரூ.12,000/– தொகுப்பூதியத்திற்கு, தொழில் நுட்ப திறனும், அனுபவமும் (Skilled Person) உள்ள இயக்கிகள் முன் வர தயங்குவதால், விவசாயப்பணிகளை காலத்தே முடிப்பதில் சுணக்கம் ஏற்படுகிறது. மேலும், பயிர்சாகுபடி செய்யப்படுகின்ற பருவ காலங்களை பொருத்து, இயந்திரங்களை இயக்கப்பட வேண்டியுள்ளதால், தனியார் துறையினரால் வாடகைக்கு விடப்படும் இது போன்ற இயந்திரங்களின் கடும் போட்டியினை வேளாண்மை பொறியியல் துறை எதிர்கொண்டு, பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் விவசாயிகளின் தேவையினை முழுமையாக பூர்த்தி செய்ய முடியவில்லை, என்றும் மேலே படிக்கப்பட்ட பார்வை 6ல் உள்ள அரசாணையில், வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையில் ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு தொகுப்பூதியம் ரூ.15,000/– என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது போன்று தற்பொழுது வேளாண்மை பொறியியல் துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்ற 59 இயக்கிகளுக்கு தொகுப்பூதியம் ரூ.12,000/– லிருந்து ரூ.15,000/– என அரசினால் உயர்த்தி வழங்கப்படும் பட்சத்தில், விவசாயிகளின் தேவையினை முழு அளவில் பூர்த்தி செய்து, உணவு உற்பத்தியினை பெருக்கிட வாய்ப்புகள் உள்ளது என்றும் இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் ரூ.21,24,000/– மட்டுமே ஆகும் என தலைமைப் பொறியாளர் (வே.பொ) தெரிவித்துள்ளார்.

5) தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசிலனை செய்து அதனை ஏற்கலாம் என கருதி தற்பொழுது வேளாண்மைப் பொறியியல் துறையில் உழுவை வாடகைத்திட்டம் மற்றும் சிறுபாசனத்திட்டத்தில் இயக்கப்படும் அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை இயக்குவதற்கு, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்ற 59 இயக்கிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியத்தினை ரூ.12,000/–லிருந்து ரூ.15,000/–ஆக (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கவும் இதனால், 2018 –2019–ஆம் நிதியாண்டிற்கு ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.1,77,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்), நிதிஒப்பளிப்பு செய்து, அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்தொகுப்பூதியஉயர்வு ஆணை வெளியிடப்படும் நாள் முதல் வழங்கப்பட வேண்டும்.

(த.பி.பா)

6) மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட தொடர் செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401 – 00 – பயிர் வளர்ப்பு – 113 – வேளாண்மைப் பொறியியல் – மாநிலச் செலவினங்கள் – AC - டிராக்டரை வாடகைக்கு விடும் திட்டம் – 33 தொழில் முறை சிறப்புப்பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்"
(த.தொ.கு 2401 – 00 – 113 – AC – 3345)

7) மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2018–2019 ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)க்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக வரவு செலவு திட்ட கருத்துருவை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.2/வேளாண்மை)த் துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அறிவுறுத்தப்படுகிறார்.

8) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்408/வேளாண்/2019, நாள் 11.02.2019 இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதிஒதுக்கப் பேரேடு எண். (ASL) 2693 ( இரண்டாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று மூன்று)

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**ககன்தீப் சிங்பேடி**
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை –35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை –18. (பெயரில்).
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA), சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA), சென்னை-18.
ஆணையர், கருவூலக் கணக்கு அலுவலகம், சென்னை–15.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம்,
(சமூகத் தணிக்கைப்பிரிவு), சென்னை–9.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை / மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்) அலுவலகம், சென்னை – 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு.3.)த் துறை, சென்னை–9 (பட்டியல் படுத்தும் வகைக்கு).
வேளாண்மை (வே.நி.3)த் துறை, சென்னை–9.
நிதி (வேளாண்மை) த்துறை, சென்னை–9.
உதவி நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை 9.
இருப்பு கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.